**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 356/2022**

பெயர் - கலைச்செல்வன் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :24.03.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதி வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

11.06.2023 ல் அனுப்பிய பிரதிவாதியின் பதில் அறிவிப்பிற்கு நான் மறுப்பு தெரிவித்து அறிவிப்பு கொடுத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பணம் கொடுத்த விபரம் முருகனுக்கு தெரியும் என்று சொல்லி உள்ளேன் அவரை சாட்சியாக விசாரிக்க உள்ளேன். சுதாகர் என்பவருக்கும் தெரியும். வேறு யாருக்கும் தெரியும். பிரதிவாதி என் நண்பர் என்றால் சரிதான். ரூபாய் 4 லட்சம் ரொக்கமாக சார் பதிவாளர் அலுவலக வாசலில் கொடுத்தேன் என்றால் சரிதான். அதனை என் வங்கி கணக்கில் இருந்து எடுத்துக் கொடுத்தேன் என்றால் சரிதான். 29.05.2020 அறிவிப்பில் பலபேர் மூலமாக பணம் கேட்டதாக சொல்லி உள்ளேன். அவர்கள் சுதாகர், வெற்றி, பாண்டியன், பிரகாஷ் ஆகியோர் சீர்காழியை சேர்ந்தவர்கள். பிரதிவாதி முருகன் மற்றும் சுதாகர் மூலமாகதான் என்னிடம் பணம் பெற்றார். பிரதிவாதி மீது வேறு எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை. சாட்சிகள் ஷமுன்னிலையில் பிரதிவாதி 2 லட்சம் வரவு வைத்ததற்கு நான் ரசீது கொடுக்கவிலலைஎன்றால் பணமே கொடுக்கவிலலை. நான் சாக்கு வியாரம் செய்கிறேன். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்பது தெரியாது. பிரதிவாதிக்கு எழுத படிக்க தெரியுமா என்ற விபரம் என்பது தெரியாது. ஆனால் கையெழுத்து போடுவார். எனக்கும் பிரதிவாதிக்கும் நேரடியாக கடன் எதுவும் கிடையாது என்றாலும், முருகன் ரவி மூலாக பெற்ற 2 லட்சத்தை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. செக்யூரிட்டியாக எழுதிக் கொடுத்த பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கில் பொய்யாக வழக்குபோட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும், முருகனும் எனக்கு சேரவேண்டிய 2 லட்சத்தை தற்போதும் கொடுக்க தயாராக உள்ளார்கள் என்றாலும் அதனை வாங்க மறுத்து சொத்தை அகபரிக்கும் நோக்கில் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.